# கோறளைப்பற்று பிரதேச சபை

## 53வது சபை அமர்வு (07.07.2022)

## கூட்டறிக்கை

**காலம்:** 07.07.2022 – வியாழக் கிழமை, காலை 9.00 மணி

**இடம்:** கோறளைப்பற்று பிரதேச சபையின், சபா மண்டபம்.

**தலைமை:** கௌரவ. தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்

கோறளைப்பற்று பிரதேச சபையின் 53ஆவது சபை அமர்வு, 07.07.2022 வியாழக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கோறளைப்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் அமர்வில் கலந்து கொண்ட கௌரவ உறுப்பினர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 01. திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் | ~ கௌரவ தவிசாளர் |
| 02. திரு. தர்மலிங்கம் யசோதரன் | ~ கௌரவ உப தவிசாளர் |
| 03. ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 04. திரு. சிற்றம்பலம் கிருபாகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 05. திரு. காளிக்குட்டி நடராசா | ~ கௌரவ உறுப்பினர் |
| 06. ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ் | ~ கௌரவ உறுப்பினர் |
| 07. ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் | ~ கௌரவ உறுப்பினர் |
| 08. திரு. கனகரெட்ணம் கமலநேசன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 09. திரு. பொன்னையா புஸ்பேந்திரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 10. திரு. சீனித்தம்பி தர்மலிங்கம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 11. ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 12. திரு. கதிரவேலு நல்லரெட்ணம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 13. திரு. குணராசா குணசேகரன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 14. திரு. கந்தசாமி பகீரதன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 15. திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் | ~ கௌரவ உறுப்பினர் |
| 16. திரு. சாமித்தம்பி மணிசேகர் | ~ கௌரவ உறுப்பினர் |
| 17. திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் | ~ கௌரவ உறுப்பினர |
| 18. திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி | ~ கௌரவ உறுப்பினர் |
| 19. திருமதி. பொன்னையா கலைவாணி | ~ கௌரவ உறுப்பினர் |
| 20. ஜனாபா. மஹ்முதுலெவ்வை நபீரா | ~ கௌரவ உறுப்பினர் |
| 21. திரு. சுந்தரம் சுதர்சன் | ~ கௌரவ உறுப்ப |
| 22. ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் | ~ கௌரவ உறுப்பினர் |
| 23. திரு. சண்முகம் கதிரவன் | ~ கௌரவ உறுப்பினர் |

53ஆவது  சபை அமர்வானது கௌரவ தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் அவர்களின் தலைமையில் சபா மண்டபத்தில் 07.07.2022 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.00 மணியளவில் ஒரு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது
அதனைத்தொடர்ந்து 53ஆவது சபை அமர்விற்கு வருகை தந்த , கௌரவ உப தவிசாளார், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு  கௌரவ தவிசாளர் அவர்களினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது .

அதில் பொருளாதாரப் பிரச்சனைகளும் எரிபொருள் தட்டுப்பாடும் நிலவிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இன்றைய சபை அமர்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் ,கௌளவ உறுப்பினர்கள் சிலர் பேருந்தில் வருகை தந்து கொண்டிருப்பதாக தகவல்களை தெரிவித்துள்ளதாகவும் ,

எரிபொருள் பிரச்சினையால் இரண்டு நாட்கள் திண்மக்கழிவகற்றல் இடம்பெறாமல் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததாகவும் , எரிபொருள் வழங்குவது தொடர்பான அதிகாரம் மாவட்ட செயலாளருக்கு வழங்கியிருப்பதனால் திண்மக்கழிவகற்றல் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக மாவட்ட செயலாளரிடம் அறிவிக்கப்ட்டமைக்கிணங்க, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போ மூலம் திண்மக்கழிவகற்றும் வாகனங்களுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்தித் தந்திருப்பதாகவும், எரிபொருளுக்கான பணத்தினை உடனடியாக வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டமைக்கு அமைவாக காசோலையாக வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்ததுடன்,

எரிபொருள் பிரச்சினை காரணமாக திண்மக்கழிவகற்றல் நடவடிக்கையினை மட்டுப் படுத்தி மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இதனால் பதிலீட்டு சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்க முடியாத சந்தர்பங்கள் இருந்ததாகவும் தெரிவித்ததுடன் ,

கிடைக்கப்பெறும் திண்மக்கழிவகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எரிபொருளினை வீண்விரயமின்றி பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாகவும் , எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக எமது சபையில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கடமைக்கு வருவதில் பிரச்சினை காணப்படுவதாகவும், அத்துடன் மிக முக்கியமாக வருமான வரி பரிசோதர்கள் மற்றும் கோராவெளி ,முறுத்தானை பகுதிகளில் நீர் வழங்கல் நடவடிக்கைக்குச் செல்பவர்களுக்குரிய எரிபொருள் தேவையாக உள்ளதாகவும் , இவ் விடயம் தொடர்பாக தனியாக சுட்டிக்காட்டி மாவட்ட செயலாளர் மற்றும் பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

எமது சபை உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு 03 தடவைகள் மட்டுப்படுத்தப்பட்டு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் எரிபொருள்பெற்றுக் கொள்ளாத உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு அடுத்ததடவை எமக்கு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் எரிபொருளைப் பெற்றுத்தர ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும்  தெரியப்படுத்தியதோடு ,

திண்மக்கழிவகற்றல் நடவடிக்கையின் போது பொலீத்தீன் இரண்டு அல்லது மூன்று தடவைகள் ஏற்றி வந்ததாகவும் தற்பொழுது அதனை மட்டுப்படுத்தி சேகரித்து வைப்பதற்கான அறிவுறுத்தல்கள் எல்லா பிரதேசங்களுக்கும்  வழங்கப்பட்டிருப்பதாகவும், அத்துடன் ஓர்நாளில் சேகரிக்கப்பட்ட பொலீத்தீன்களை அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கான விளக்கங்களை கௌரவ உறுப்பினர்களும் தங்கள் வட்டார மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும் எனவும், அத்துடன் குப்பைகளை தரம் பிரித்து வைக்கவும் அறிவுறுத்தவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டதுடன்,

எமது சபையின் வருமானம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதாகவும் அத்துடன் முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் என்பன இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனவும், எரிபொருளுக்கான செலவீனம் வழமையை விட மூன்று மடங்கு அதிகரித்திருப்பதாகவும், இதனால் முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் கிடைக்கப்பெறாததனால் பதிலீட்டுத் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படும் என சுட்டிக்காட்டியதுடன்,

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வருமான பரிசோதர்கள் வருமான அறவீடு செய்வதில் சிரமமான நிலை காணப்படுவதாகவும் நேற்றைய தினம் எமது சபைக்குச் சொந்தமான போட்டோன் வாகனத்தினைப் பயன்படுத்தி வருமான அறவீடு செய்யப்பட்டதாகவும் வருமான வரிப் பரிசோதகர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பாக மூன்று பிரதேச செயலகங்களுக்கும் கடிதம் வழங்கப்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் எரிபொருள் கிடைக்கப்பெற்றால் அவர்களுக்கு வழங்குலதற்கான நடவடிக்கை எடுக்கப்படும என தெரிவித்துக்கொண்டதுடன்,

மரம் வெட்டியது தொடர்பாக பிரதேச செயலகத்திற்கு கடிதம் வழங்கியிருப்பதாகவும், இது தொடர்பாக பிரதேச செயலகத்தினால் அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைவாக கடந்த வாரத்திற்கு முன்னைய வாரம் எமது சபைக்கு வருகைதந்து வெட்டிய மரத்தினை ஏற்றிச் சென்றதாகத் தெரிவித்ததுடன்,

ஜப்பான் மொழி பயில்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டதாகவும், இது தொடர்பாக அனைத்து பகுதிகளுக்கும் ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டதாகவும் இதனைடிப்படையில் ஒரு சிலர் சபைக்கு வருகைதந்து விண்ணப்ப படிவம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

சமூர்த்தி பயனாளிகள் இருவரை வெளிநாட்டுற்கு அனுப்புவதற்கான நடவடிக்கையொன்று இடம்பெற்று வருவதாகவும் இது தொடர்பாக whatapp செயலி மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டிருப்பதாகவும் ஏனைய விடயங்களை சமூர்தியுடன் தொடர்பு பட்டவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என கௌரவ உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியதுடன்,

அதே போன்று எமது சபையில் கடமை புரியும் திண்மக்கழிவகற்றும் ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனையினை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இலவசமாக வழங்கி வருவதாகவும், அதனடிப்படையில் இவ்வருடத்திற்கான பரிசோதனை இன்று எமது அலுவலகத்தில் நடைபெறுவதாக தெரிவித்ததுக்கொண்டு கடந்தமாத கூட்டக்குறிப்பினை உறுத்திப்படுத்தித்தருமாறு கேட்டுக்கொண்டு தனது தலைமையுரையினை நிறைவு செய்தார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள்** திருத்தத்தில் வாழைச்சேனை வட்டார உறுப்பினர் (கௌரவ உறுப்பினர் திரு. கனகரெட்ணம் கமலநேசன் அவர்கள்)எதிர்த்து வாக்களித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஆனால் கூட்டக்குறிப்பில் ஆதரித்து வாக்களித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அத்துடன் எண்ணிக்கையில் அவருடைய வாக்கு நிராகரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தீர்மானங்கள் அனைத்திலும் வாக்கெடுப்பின் போது கௌரவ உறுப்பினர் (ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன்) அவர்கள் கலந்து கொள்ள வில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், ஒரு கௌரவ உறுப்பினர் சபையில் இருந்து கொண்டு கலந்து கொள்ள வில்லை என கூட்டக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** கௌரவ உறுப்பினர் வாக்கெடுப்பில் ஆதரவாகவோ, எதிராகவோ ,நடுநிலையாகவே வாக்களிக்காததனால் அவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதாக தெளிவுபடுத்தினார்.

**அதனைத் தொடர்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள்** கூட்டக்குறிப்புகள் அனைத்தும் திருத்தத்துடன் சமர்பிக்கப்பட வேண்டும் என தான் தெரிவித்த கருத்து இடம்பெற வில்லை என சுட்டிக்காட்டினார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள்** தீர்மனம் வாக்கெடுப்பு இடம் பெறும்போது தரப்பட்ட வாக்கெடுப்பினை பதிவு செய்யும் காகிதத்தில் தான் எழுதிய விடயம் வரவில்லை எனவும், தீர்மானம் நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பு இடம் பெறும் போது இரண்டு கைகளையும் உயர்த்தி எதிர்பினைத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டதுடன், கலந்து கொள்ளவில்லை என கூட்டக்குறிப்பில் குறிப்பிட்டதை விட தான் எழுதிய விடயத்தினைக் கூட்டக்குறிப்பில் குறிப்பிட்டிருக்கலாம் என தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

அதனைத் தொடர்ந்து கடந்தமாதக் கூட்டக்குறிப்பினை கௌரவ உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய திருத்தங்களுடன் கௌர உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததனைத் தொடர்ந்து கடந்த மாதக் கூட்டக்குறிப்பு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் கூட்டக்குறிப்பிற்கு ஆதரவாக வாக்கெடுப்பு இடம்பெறும்போது சபையில் பிரசன்னமாகியிருந்த கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உபதவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், மற்றும் கௌரவ உறுப்பினர்களான திரு. காளிக்குட்டி நடராசா, திரு. சிற்றம்பலம் கிருபாகரன் ,ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் , திரு. பொன்னையா புஸ்பேந்திரன், திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி, திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன் அகிய 13 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்ததுடன் எதிராக ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. கதிரவேலு நல்லரெட்ணம், காமீது லெவ்வை இப்றாஹீம், ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா ஆகிய 05 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன் நடுநிலை வகித்ததனால் 08 மேலதிக வாக்குகளினால் கடந்தமாதக் கூட்டக்குறிப்பானது அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதோடு, கௌர உறுப்பினர்களான திரு. குணராசா குணசேகரன், திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை

திருத்தம் 01 : கூட்டக்குறிப்புகள் அனைத்தும் திருத்தத்துடன் சமர்பிக்கப்பட வேண்டும் கௌரவ உறுப்பினர் ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா அவர்கள் கடந்த மாத கூட்டத் தொடரீரில் (52 வது) குறிப்பிடப்பட்ட விடயம் இணைத்துக் கொள்ளப்படுகின்றது

திருத்தம் 02 : கடந்த மாதக் கூட்டக்குறிப்பில் (52வது ) சமர்பிக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களிலும் கௌரவ உறுப்பினரான ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என குறிப்பிடப்பட்டுள்ள வசனமானது கௌரவ உறுப்பினரான ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வாக்கெடுப்பின் போது தீர்மானங்கள் அனைத்தையும் நிராகரிப்பதாக குறிப்பிட்டிருந்தார் என மாற்றம் செய்யப்படுகின்றது.

### கணக்கறிக்கை சமர்ப்பித்தல்

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கடந்தமாத கணக்கறிக்கை கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது .

### பிரேரணைகளை நிறைவேற்றுதல்

## பிரேரணை இல : KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/01/2022

- **முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்ளும் முகமாக மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களுக்கு வேண்டுகோளொன்றினை விடுத்தல் தொடர்பான பிரேரணையினை கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.**

இப்பிரேரணையில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன

- முச்சக்கர வண்டி ஓட்டுனரின் அன்றாட வாழ்வாதாரப் பிரச்சினை.
- முச்சக்கர வண்டிகளுக்கான மாதாந்த லீசிங் செலுத்துவதில் உள்ள பிரச்சினை
- கிராமங்களிலுள்ள கர்ப்பிணி தாய்மார்களை வைத்தியசாலைக்குச் கொண்டு செல்வதில் காணப்படும் பிரச்சினை
- பாடசாலை மாணவர்களை பாடசாலைக்குச் கொண்டு செல்லல் மற்றும் தனியார் வகுப்புக்களுக்கு அழைத்துச் செல்வதில் ஏற்படும் பிரச்சினை

என்பன எரிபொருள் இன்மையால் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் எதிர்நோக்கும் மேற்படி பிரச்சினையை சுட்டிக்காட்டி அரசாங்க அதிபர் ஊடாக எரிபொருளினை பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வது தொடர்பாக ஆவன செய்வதற்காக அவர்களுக்கு மகஜர் ஒன்றினை வழங்குவதற்கான இப்பிரேரணை கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள்** முச்சக்கர வண்டி வைத்திருப்பவர்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுப்பதற்கு எமக்கு தார்மீகப் பொறுப்பு உள்ளதாகவும் அதனால் இக்கடிதத்தின் பிரதியினை எமது சபைக்குட்பட்ட அனைத்து பிரதேச செயலாளர் பரிவுகளுக்கும் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள்** பாசிக்குடாப் பிரதேசத்தில் உள்ள முச்சக்கர வண்டிகளுக்கான எரிபொருளை பெற்றுக் கொடுப்பதற்கான விடயத்தினையும் உள்ளடக்குமாறு கேட்டுக்கொண்டார்

**அதற்குப் பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** எமது சபைக்குட்பட்ட அனைத்து ஆட்டோ சங்கங்களுக்கும் இதில் உள்ளடக்கப்படுவதாக விளக்கமளித்தார்.

**அதனைத் தொடர்ந்து மேற்படிப் பிரேரணையினை** கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததைத் தொடர்ந்து பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக பிரேரணை சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்தவர்களில் கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன்,திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் , திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. குணராசா குணசேகரன், திரு. திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ,ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, , திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம் ஆகிய 20 உறுப்பினர்கள் வாக்களித்ததுடன், தீர்மானத்திற்கு எதிராக, ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வாக்களித்தனால் **KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/01/2022 இலக்க பிரேரணை 19 மேலதிக வாக்குகளினால் அங்கீகாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன்** திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை

## பிரேரணை இல : KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/02/2022

**எமது சபையில் கடமை புரியும் வருமான பரிசோதகர்களுக்கான மாதாந்த பிரயாண கொடுப்பனவினை எரிபொருள் கட்டளை படிவமாக பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணையினை கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் அவர்களால் சமர்பிக்கப்பட்டது .**

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய அகௌரவ தவிசாளர் அவர்கள் தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பிரச்சினை காரணமாக எரிபொருள் பெற்றுக் கொள்வதில் எமது சயில் கடமை புரியும் இரண்டு வருமான பரிசோதகர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதனால் இவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் பிரயானக் கொடுப்பனவினை எரிபொருள் கட்டளை படிவம் ஊடாக எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்காக இப்பிரேரணையினை சமர்ப்பித்துள்ளதாகவும் , அது தொடர்பான ஆய்வு உத்தியோகத்தர்களிடம் ஆலோசனை பெற்றுள்ளதாகவும் அதனடியப்படையில் சபையின் அங்கீகாரம் ஊடாக இதனை வழங்கலாம் என தெரிவித்ததற்கமைவாக இதனால் சபையின் வருமான அறவீட்டினை அதிகரிக்க எதிர்பாத்திருப்பதாக கௌரவ உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மேற்படிப் பிரேரணையினை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன் அவர்கள் வழிமொழிந்ததைத் தொடர்ந்து பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக பிரேரணை சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்தவர்களில் கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன்,திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் , திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. குணராசா குணசேகரன், திரு. திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி

,ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, , திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம் ஆகிய 20 உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் தீர்மானத்திற்கு எதிராக, ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வாக்களித்தனால் **KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/02/2022 இலக்க பிரேரணை 19 மேலதிக வாக்குகளினால் அங்கீகாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன்** திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

### பிரேரணை இல : KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/03/2022

**வாழைச்சேனை பொது நூலகத்தின் பொன் விழாவினை சிறபிக்கும் முகமாக நூலகப்பகுதியில் சிறுவர்களுக்கான பகுதியினை அமைத்துபதற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியினை பெற்றுக் கொடுப்பதற்குரிய சபை அங்கீகாரம் பெறுவதற்கான பிரேரணையானது கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் அவர்களால் சமர்பிக்கப்பட்டது .**

அதனைத் தொடர்ந்து மேற்படிப் பிரேரணையினை கௌரவ உறுப்பினர் திரு.சாமித்தம்பி மணிசேகர அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதன் அவர்கள் வழிமொழிந்ததைத் தொடர்ந்து பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் பிரேரணைக்கு ஆதரவாக பிரேரணை சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்தவர்களில் கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன்,திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் , திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. குணராசா குணசேகரன், திரு. திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ,ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, , திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம் ஆகிய 20 உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் தீர்மானத்திற்கு எதிராக,ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள் வாக்களித்தனால் **KPPS/M.MEETING/53/PROPOSAL/JYLY/03/2022 இலக்க பிரேரணை 19 மேலதிக வாக்குகளினால் அங்கீகாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன்** திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## தீர்மானங்களை நிறைவேற்றல்

1. **தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/53/JULY/01/2022**

- **கணனிப் பாட நெறியினை பூர்த்தி செய்த இரு மாணவர்களை 06 மாதகாலம் கணனிப் பயிலுனராக இணைத்துக்கொள்வதற்கான சபை அங்கீகாரம் பெறல்.**

அதனைத் தொடர்ந்து மேற்படிப் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உறுப்பினர் திரு. சிற்றம்பலம் கிருபாகரன் அவர்கள் வழிமொழிந்ததைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்தவர்களில் கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன்,திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் , திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு. குணராசா குணசேகரன், திரு. திரு. கந்தசாமி பகீரதன், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி ,ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா, , திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஆகிய 19 உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் தீர்மானத்திற்கு எதிராக,ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன், மற்றும் ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்தனால்**KPPS/M.MEETING/53/JULY/01/2022இலக்க தீர்மானமானது 17 மேலதிக வாக்குகளினால் அங்கீகாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன்** திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

2. **தீர்மான இலக்கம் KPPS/M.MEETING/53/ JULY /02/2022**

- **மோட்டார் கிறேட்டர் வாகனத்திற்கான பதில் சாரதியொருபரை நியமிப்பதற்கான சபை அங்கீகாரம் பெறல்.**

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. கந்தசாமி பகீரதன் அவர்கள்** கோரவளி கண்ணகி அம்மன் ஆலயத்தின் குளிர்தீர் சடங்கு தொடங்கும்வதற்கு மூன்று நாட்களுக்கு முன் தவிசாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு அவ் வீதியினை சமம் படுத்ததித்துருமாறு கோரியதாகவும் ஆனால் அது நடைபெ வில்லை எனவும் மேற்படி வாகனத்திற்குரிய சாரதி சரியான காரணங்களை கொண்டு வராமல் சமூகமளிக்காமல் இருந்திருப்பாரேயானால் அவருக்கான சந்தர்ப்பத்தை வழங்க முடியும் எனவும் அவ்வாறு இல்லாமல் குறிப்பிட்ட சாரதி சபையை உதாசீனபடுத்துவதற்கான கடமைக்குச் சமூகமிளக்காமல் விட்டிருந்தால் அதனால் மக்களும் உதாசீனப்படுத்தப்பட்டிருப்பார்கள் எனவும் ஆகவே குறித்த சாரதி கடமையாற்றுவதற்கு இயலாவிட்டால் அதனை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் குறித்த சாரதி வரும் வரைக்கும் வேலைகளை தாமதப்படுத்திக் கொண்டிருக்க முடியாது எனவும் சபையிலுள்ள வளங்கள் அனைத்தும் மக்களுக்காக சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் எனவும் குறிப்பிட்டதுடன் கறித்த சாரதி உடனடியாக தனது வேலையை பொறுப்பேற்பாராக இருந்தால் பிரச்சனை இல்லை எனவும் இல்லா விட்டால் பிறிதொரு பதிலீட்டுச் சாரதியினை நியமிக்க வேண்டுமென தனது கருத்தினைப் பதிவு செய்தார் .

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். காமீது லெவ்வை இப்றாஹீம் அவர்கள்** நாட்டில் நடைபெறும் பொருளாதார பிரச்சினை காரணமாக வீட்லும் அப் பிரச்சினை எதிரொலிப்பதாகவும் குறித்த சாரதியின் விடயம் தொடர்பாக கடந்த இரண்டு வருடங்களாக பேசப்படுவதாகவும், குறித்த சாரதிக்கு இதுவரைக்கும் நிரந்தரமானதொரு சம்பளம் தீர்மானிக்கப்படவில்லை எனவும் குறித்த சாரதி அவருடைய வாழ்வாதரப் பிரச்சனை தொடர்பாக நான்காம் மாதம் எழுத்து மூலம் கடிதம் தந்திருப்பதாக குறிப்பிட்முடுள்ளதாகவும் இது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என கேள்வி எழுப்பினார்

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** இதுவரையில் கணக்காய்வளர்களின் அறிக்கையின் படி அவருக்கு எமது சபையால் சழங்கப்படும் சம்பளமானது ஏனைய சாரதிகளை விட அதிகம் என குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் குறித்த சாரதிற்கு சம்பளம் வழங்கும் போது சட்டதிட்டங்களை அடிப்படையாகக் கொண்டுதான் வழங்க முடியும் என பதிலளித்தார்

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன் அவர்கள்** இவ் விடயம் தொடர்பான உண்மைத்தன்மையினை அறிந்து கொள்வதற்காக குறித்த சாரதியினை அழைத்து விசாரிக்குமாறு தனது கருத்தினை பதிவு செய்தார்

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் திரு. சுந்தரம் சுதர்சன் அவர்கள்** இவ்விடயம் தொடர்பாக எமது சபைக்குட்பட்ட பொதுமக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கௌரவ தவிசாளார் குறிப்பிட்டதைப்போன்று 36000.00ரூபாய் பெறுமதியான ஒயிலினை குறித்த சாரதி விற்றதாக குற்றம் சாட்டப்படுகின்றது இதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**அதனைத் தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர் ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப் அவர்கள்** குறித்த சாரதியை இடை நிறுத்தாமல் பதிலீட்டு சாரதியை நியமிப்பதற்கான அனுமதி கோரப்படு கின்றதா என கேள்வி எழுப்பியதுடன் குறித்த சாரதியின் பிரச்சினையையும் கேட்டறிந்து கொள்ளுமாறு தனது கருத்தினை பதிவு செய்தார்

**அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள்** குறித்த சாரதி கடமைக்கு வராத சந்தர்ப்பத்தில் பதிலீட்டு சாரதி ஒருவரை நியமிப்பதற்கான அனுமதிதான் கோரப்பட்டிருப்பதாக பதிலளித்தார்

**அதனைத்தொடர்ந்து உரையாற்றிய கௌரவ உறுப்பினர்** திரு. கதிரவேலு நல்லரெட்ணம் அவர்கள் இது ஒருவருடைய வாழ்வாதார பிரச்சனை என்பதால் அவரை ஒரு விசாரணை செய்து அடுத்து ஒரு விசேட கூட்டத்தில் இத் தீர்மானத்தினை எடுக்குமாறு தனது கருத்தினை பதிவு செய்தார்

அதனைத் தொடர்ந்து மேற்படிப் தீர்மானம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்தினை கௌரவ உறுப்பினர் திரு. காளிக்குட்டி நடராசா அவர்கள் முன்மொழிந்ததுடன் அதனை கௌரவ உறுப்பினர் திரு. பொன்னையா புஸ்பேந்திரன் அவர்கள் வழிமொழிந்ததைத் தொடர்ந்து தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டதுடன் தீர்மானத்திற்கு ஆதரவாக தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் பொழுது சபையில் பிரசன்னமாகியிருந்தவர்களில் கௌரவ தவிசாளர் திருமதி. ஸோபா ஜெயரஞ்சித் , கௌரவ உப தவிசாளர் திரு. தர்மலிங்கம் யசோதரன், அவர்களுடன் கௌரவ உறுப்பினர்களான திரு. சிற்றம்பலம் கிருபாகரன், திரு. காளிக்குட்டி நடராசா, ஜனாப். சேகு இஸ்மாயில் முகம்மது இம்தியாஸ், ஜனாப். முகம்மட் புகாரி முகம்மட் தையிப், திரு. கனகரெட்ணம் கமலநேசன், திரு. பொன்னையா புஸ்பேந்திரன்,திரு. சீனித்தம்பி தர்மலிங்கம், ஜனாப். ஆதம்லெப்பை அப்துல் கபூர் , திரு. குணராசா குணசேகரன், திரு. திரு. கந்தசாமி பகீரதன்,, திரு. சாமித்தம்பி மணிசேகர், திருமதி. பஞ்சாட்சரம் லெட்சுமி , , திரு. சுந்தரம் சுதர்சன், திரு. சண்முகம் கதிரவன், ஆகிய 16 உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் தீர்மானத்திற்கு எதிராக,ஜனாப். முகம்மது புகாரி முகம்மது வாசுதீன், மற்றும் ஜனாப் காமீது லெவ்வை இப்றாஹீம்

ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்ததுடன் திரு. கதிரவேலு நல்லரெட்ணம், திரு.கிருஷ்ணபிள்ளை சேயோன், ,ஜனாபா. மஹ்மூதுலெவ்வை நபீரா ஆகிய 03 கௌரவ உறுப்பினர்கள் நடுநிலை வகித்ததனால் **KPPS/M.MEETING/53/JULY/01/2022 இலக்க தீர்மானமானது 14 மேலதிக வாக்குகளினால் அங்கீகாரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அத்துடன்** திருமதி. பொன்னையா கலைவாணி , திருமதி. கந்தசாமி றஞ்சிதமலர் ஆகிய 02 கௌரவ உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

**இறுதியாக கௌரவ தவிசாளர் அவர்களின் நன்றியுரையுடன் 53ஆவது சபை அமர்வானது காலை 11.15 மணியளவில் இனிதே நிறைவுசெய்யப்பட்டது.**

……….....................…………………..
**திருமதி. ஸோபா ஜெயரஞ்சித்**
தவிசாளர்
கோறளைப்பற்று பிரதேச சபை,
வாழைச்சேனை.